# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைசெல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடகச் செய்தி : 26/2017

நாள்.27-09-2017

பெறுநர்

அனைத்து ஊடகங்கள்
சென்னை

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு. சுப்பிரமணியன், பொதுச்செயலாளர் மு. அன்பரசு ஆகியோர் இணைந்து வெளியிடும் பத்திரிகைச் செய்தி :

## ஊடகச் செய்தி

**8வது ஊதிய மாற்றத்திற்காக அமைக்கப்பட்ட அலுவலர் குழு**
**ஊதிய மாற்ற பரிந்துரைகள் சமர்ப்பிப்பு**
**இடைவிடாத போராட்டங்களுக்கு கிடைத்த முதல் வெற்றி**

தமிழக அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான 8வது ஊதிய மாற்றத்திற்கான அலுவலர் குழுவை அமைப்பதற்கும் அது அமைக்கப்பட்ட பின்னர் அதன் பரிந்துரைகளை குறித்த காலவரைக்குள் சமர்ப்பிக்க தர்ணாக்கள், ஆர்ப்பாட்டங்கள் போன்ற பலவித இயக்க நடவடிக்கைகள் நடத்தியும், கடைசியில் அது பரந்துபட்ட அரசு ஊழியர்,ஆசிரியர்களின் ஒன்றுபட்ட பேரெழுச்சியாக உருவெடுத்த வேலைநிறுத்தப் போராட்டமாக பரிணமித்த பின்பு, நீதிமன்றத் தலையீட்டால் கண்டிப்பான காலக்கெடு நிர்ணயிக்கப்பட்ட பின், தற்போது முதன்முறையாக சொன்ன காலவரையரைக்குள் அலுவலர் குழு தனது பரிந்துரையை சமர்ப்பித்துள்ளது . இந்த பரிந்துரைகள் காலதாமதமாக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டாலும், அறிக்கையில் வழங்கப்பட்ட பரிந்துரைகள் என்ன என்பது தெரியாத போதிலும், நீதிமன்ற உத்தரவுக்குப் பின்னர் குறித்த நாளுக்குள் அதாவது 30.9.2017க்குள் வெளியிடப்பட்டுள்ளது உண்மையில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றிச் செய்தியாகும்.

பலகட்ட போராட்டங்களுக்குப் பிறகு நீதிமன்ற தலையீட்டின் பேரில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் தொடர் கோரிக்கைகளின் பேரில் இப்பரிந்துரை வழங்கப்பட்டுள்ளதை வரவேற்கும் அதே நேரத்தில் இந்த பரிந்துரை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிகழ்வானது ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பின் இடைவிடாத போராட்டங்களுக்கு கிடைத்த முதல் வெற்றியாகும். இந்த வெற்றி முழுமையடையும் வரை அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் ஒன்றிணைந்து உறுதியுடன் நிற்பார்கள்.

(மு. அன்பரசு)
பொதுச் செயலாளர்